**மாத்தறை பிரதேச சபை**

**மாத்தறை மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 10 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாத்தறை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்கு மற்றும் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3,473,612 தொகை உரிய கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டு மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆண்டின் போது நிர்மாண வேலைகளுக்காக பொது கணக்கிற்கு ரூபா 600,000 தொகை ஒன்று மாற்றுதல் நிர்மாண வேலைகளுக்கான காசேட்டில் பதியப்படாமையை சரிசெய்வதற்காக மீளாய்வாண்டின் போது அத்தொகையை காசேட்டில் செலவு வைக்கப்பட்டு திரண்ட நிதியம் வரவு வைக்கப்பட வேண்டும். எனினும் மூலதனச் செலவுகள் தலைப்பு 309 இல் வரவு வைக்கப்பட்டு ஆண்டிற்கான மூலதன செலவு அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மின் உபகரண இருப்பு பதிவேட்டின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 41 சீஎப்எல் மின்குமிழ்கள் காணப்பட்டதுடன் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருந்த தொக்கு பட்டோலையின் பிரகாரம் மின் குமிழ்கள் 71 ஆகும். அதன் பிரகாரம் மிகையாகக் காட்டப்பட்டிருந்த 30 குமிழ்களின் பெறுமதி ரூபா 14,850 ஆகும்.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 03 கணக்கு விடயங்கள் தொடர்பான பெறுமதி ரூபா 29,327,169 ஆக காணப்பட்டதுடன் பட்டோலையின் பிரகாரம் பெறுமதி ரூபா 9,041,301 ஆக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 20,285,868 ஆகும்.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 46,127,283 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 24,600,025 ஆகும்.

1.3.4 தீர்க்கப்படாத கணக்கு மீதிகள்

---

முந்திய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்ட ரூபா 25,194,739 இற்கான 10 கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல் நிதிக் கூற்றில் காட்டப்பட்டிருந்தன.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 175,134,043 பெறுமதியான 13 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணிப்பீட்டு அறிக்கை, முதலீட்டுப் பதிவேடுகள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள், மீதிச் சான்றிதழ்கள் மற்றும் பட்டோலைகள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீகரித்த செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 திகதி இலக்கம் ஐஏஐ/2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,009,842 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,421,332 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

-------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி, ஏக்கர் வரி | 521 | 324 | 873 |
| வாடகை | 2,480 | 1,345 | 385 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,090 | 1,418 | 29 |
| ஏனைய வருமானங்கள் | 59,292 | 49,184 | 34,246 |

2.2.2 வீத வரி

--------------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரியின் பெறுமதி ரூபா 818,000 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போது பில் போடப்பட்டவை மிகை கட்டணத்துடன் ரூபா 325,843 ஆகும். ஆண்டின் போது பெறுவனவுகள் ரூபா 283,284 என காணப்பட்டமையால் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 24 ஆகும். 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகையில் பெறுமதி ரூபா 862,469 ஆக காணப்பட்டதுடன் ஆண்டுதோரும் நிலுவை தொகையில் அதிகரிப்பு ஒன்று காணப்பட்டமையால் வருமானத்தை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் வருமானம் சேகரிக்கும் அதிகாரியாகிய செயலாளரின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

2.2.3 ஏக்கர் வரி

------------------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஏக்கர் வரி ரூபா 12,419 ஆக காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில் போடப்பட்டவைகள் ரூபா 3,280 தொகையுடன் மொத்தம் ரூபா 15,699 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான ரூபா 5,004 ஐ மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 32 ஆகும்.

2.2.4 வாடகை வருமானம்

---------------------------------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 393,262 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போது பில்போடப்பட்டவைகள் ரூபா 1,053,769 தொகையுடன் ரூபா 1,447,231 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 982,050 தொகையாகக் காணப்பட்டமையால் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 68 ஆகும்.

2.2.5 காணிகள் இணைப் பங்கீட்டுக் கட்டணம்

-----------------------------------------------------------------

வெவ இஹலகொட பொல்அபேஹேனவத்த என்ற காணி 2011 ஜுன் 27 ஆம் திகதி வரைபு இலக்கம் 898 கொண்ட துண்டுகளாக்கி வரைபின் மூலம் காணியை 7 துண்டுகளாக பகிரப்பட்டிருந்ததுடன் அவ் வரைபினை சபை அங்கீகரித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் 2009 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 1597/8 கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் வர்த்தமானியின் பிரகாரம் அங்கீகரிக்கப்படாத இணைப் பங்கீடுகள் பகிர்வுக்காக ரூபா 5,250 வும் நூற்றிற்கு 1 ஆகிய காணி விற்பனை வரியாக ரூபா 18,650 தொகை ஒன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.6 காணி விற்பனை வரி

-------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 154 இன் பிரகாரம் காணி விற்பனை செய்யும் நபரிடம் காணி விற்பனை கிரயத்தில் நூற்றிற்கு 1 வரியொன்று அறவிடப்பட வேண்டும். எனினும் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஏல விற்பனையில் விற்பனை செய்யப்பட்ட 17 காணிகளை சேர்ந்த 397 காணித் துண்டுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.7 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு

| | | ரூபா. |
|---|---|---|
| (அ) | நீதி மன்றத் தண்டப் பணம் | 1,016,900 |
| (ஆ) | முத்திரைக் கட்டணம் | 20,000,000 |

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

----------------------------------------------------

3.1.1 நிலையான சொத்துக்கள் கணிப்பீடு

---------------------------------------------------------------

(அ) 2014 ஆகஸ்ட் 22 திகதிய இலக்கம் 06.7(1) தீர்மானத்தின் பிரகாரம் கணிப்பீட்டு சபை ஒன்று நியமனம் செய்து சபைக்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் கணக்கு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2014 நவம்பர் 21 திகதி சபையினால் அவ்வறிக்கையின்

11 விதப்புரைகளை அமுல் நடத்துவதற்காக தீர்மானித்திருந்த போதிலும் பின்வரும் விதப்புரைகள் 2015 மே 15 வரையும் செயற்பட்டிருக்கவில்லை.

(i) சபையின் ஆதனங்களில் அங்கீகாரமின்றி வதியும் நபர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுத்தல்.

(ii) சபையின் ஆதனங்கள் அளவை செய்து எல்லைகளை குறித்து பெயர் பலகைகள் பொருத்துதல்.

(iii) சபைக்குச் சொந்தமான ஆதனங்களுக்கு காணி உறுதிகள் தயாரித்தல்.

(iv) சபையின் நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் நாளது வரை ஆக்குதல்.

(v) சபைக்குச் சொந்தமான தரிசு நிலங்களை பயன்தரு விடயங்களுக்கு ஈடுபடுத்துதல்.

(ஆ) பின்வரும் சொத்துக்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்டுள்ள விடயங்களாவன.

(i) சபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள 25 பர்சஸ் காணிக்கு காணி உறுதி ஒன்று அல்லது வரைபு ஒன்று காணப்படாமை.

(ii) இலுக்மண்டிய காணிப் பகுதி – வரைபு இலக்கம் 270 வரைபின் பிரகாரம் நாவிமன வடக்கு சனசமூக நிலையத்தின் பின்பகுதியில் கணிப்பீடு 2 பர்சஸ் காணி பௌதீக ரீதியாக காணக் கூடியதாக இருக்கவில்லை.

(iii) மாகாவிட்ட திரச்சியவத்த பொதுக் கிணறு அமைந்துள்ள காணி பௌதீக ரீதியாக காணக் கூடியதாக இருக்கவில்லை.

(iv) தல்பாவில வடக்கு மொண்டலிக்ஸ்வத்த – வரைப இலக்கம் 65/2008 தரை வரைபை சேர்ந்த 1 ரூட் 8.05 பர்சஸ் 50 இலக்கக் காணிப் பகுதி, சால்ஸ்வத்த (வின்ஸ்டன் பார்க்) இலக்கம் 59/2006 தரை வரைபு காணி உறுதி இலக்கம் 10750 மூலம் பெற்றிருந்த காணித் துண்டு இலக்கம் 40, 41, 42, 43 மற்றும் 44 ஐ சேர்ந்த 62.72 பர்சஸ்களை கொண்ட 05 காணி பகுதிகள் மற்றும் சால்ஸ் விக்வத்த வரைபு இலக்கம் 37ஏ/2010 தரை வரைபின் மூலம் பொது விடயங்களுக்காக கிடைத்திருந்த துண்டு இலக்கம் 07, 08, 09, 10 மற்றும் 29 ஐ சேர்ந்த 66.14 பர்சஸ் அளவை கொண்ட ஐந்து காணித் துண்டுகளை பௌதீக ரீதயாக கண்டுகொள்ள முடியாதிருந்தது.

3.2 ஒப்பந்த நிருவாகம்

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாத்தறை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் உட்பகுதியை விரிவாக்குவதற்காக ரஸ்ஸன்தெனிய விவசாய சங்கம் ஒன்றுடன் முதல் கட்ட வேலைக்காக 2014 ஜனவரி 30 திகதிய ரூபா 124,445 பெறுமதியான உடன்படிக்கை ஒன்றும் இரண்டாம் கட்டமாக 2014 பெப்ரவரி 24 திகதிய ரூபா 441,734 பெறுமதியான மொத்தம் ரூபா 566,179 இற்கான உடன்படிக்கை கையொப்பமிட்டு 2014 மார்ச் 26 ஆந் திகதி ரூபா 557,294 தொகையொன்று செலுத்தப்பட்டது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 ஆண்டிற்காக சபைக்குச் சமர்ப்பித்திருந்த பாதீடு 2013 திசெம்பர் 13 திகதி விஷேட பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2014 ஜனவரி 02 திகதிய இலக்கம் 1843/35 கொண்ட வர்த்தமானியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மாத்தறை உள்ளுராட்சி உதவி ஆணையாளரின் 2014 ஜனவரி 06 திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் சபையின் தலைமை அலுவலக உட்பகுதி விரிவாக்கலுக்காக பண ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. அத்துடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் உப பிரிவு 174(iv) இன் பிரகாரம் விடயங்கள் நடைபெற்றிருக்கவில்லை.

(ii) இந்த நிர்மாண வேலை தொடர்பாக 1988 பிரதேச சபை( நிதி மற்றும் நிருவாக) விதி 171 இன் பிரகாரம் மதிப்பீட்டு பேரேடு ஒன்றும், அளவைப் புத்தகம் பேணப்படாமை விதி 177 இன் பிரகாரம் ஒப்பந்தம் தொடர்பாக செயற்படாமை, விதி இலக்கம் 178(3)(1) இன் பிரகாரம் வரையறுக்கப்பட்ட கேள்வி கோரலின் போது கடைபிடிக்க வேண்டிய செய்முறைகளை எடுக்காமல் உடன்படிக்கை செய்திருந்த விவசாய சங்கத்திற்கு நிர்மாண வேலையை செய்வதற்காக சாட்டுதல், விதி 178(3)(2) இன் பிரகாரம் உடன்படிக்கை செய்திருந்த விவசாய சங்கம் தொடர்பாக தகைமை சான்றிதழ் பெற்றுக்கொள்ளல் என்பன நடைபெற்றிருக்கவில்லை.

(iii) மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி அமைச்சு செயலாளரின் 2000 ஜூலை 13 ஆம் திகதிய இலக்கம் 7/4/2000 கொண்ட சுற்று நிருபத்தின் விதி 177 இன் பிரகாரம் செயற்படாத சந்தர்ப்பங்களில் உள்ளுராட்சி ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளர் சட்டத்தை அமுல் நடத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு நடைபெற்றிருக்கவில்லை.

(ஆ) சபை மண்டபத்தை தனி ஒரு பகுதியாக நடாத்துவதற்கு ஏற்ற விதத்தில் அமைப்பதற்காக பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் பெற்றுக்கொள்வதற்காக பணம் செலுத்துதல்

---

சபையின் சபை மண்டபத்தை தனிப்பட்ட ஒரு பகுதியாக நடத்துவதற்காக 2014 நவம்பர் 21 திகதி பொதுக் கூட்டத்தின் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 415,270 இற்கான மதிப்பீட்டினை ஏற்றுக்கொள்வதற்கும் நேர் கூலி அடிப்படையில் வேலையை மேற்கொள்வதற்கும் பண ஏற்பாடுகளை 2014 பாதீட்டு பிரேரணைகளின் கீழ் பெற்றுக்கொள்வதற்கும், தொழிலாளர் கூலி மாவட்ட விலைக்குழு தீர்மானித்துள்ள தொகையினை கொடுப்பனவு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் பெற்றுக் கொள்வதற்காக கம்பனி ஒன்றிற்கு 2014 திசெம்பர் 29 திகதி ரூபா 423,915 தொகை ஒன்று 5 ஊழியர்களுக்கு 2015 பெப்ரவரி 27 திகதி ரூபா 117,000 தொகை ஆக மொத்தம் ரூபா 540,915 செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆண்டிற்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதீடு 2013 திசெம்பர் 13 திகதி விஷேட பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. தென் மாகாண முதலமைச்சரின் 2014 ஜனவரி 02 திகதிய இலக்கம் 1843/35 கொண்ட வர்த்தமானியில் விதிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மாத்தறை உள்ளுராட்சி ஆணையாளரின் 2014 ஜனவரி 06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த பாதீடு இந்த நிர்மாண வேலைக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) சபை தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ரூபா 415,270 இற்கான மதிப்பீடு வேலை விபரங்கள் மற்றும் அளவை அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை. இந்த வேலைக்கான வரைபு ஒன்றும் காணப்படவில்லை.

(iii) கொள்வனவு செய்திருந்த ரூபா 158,932 தொகை பெறுமதியான 32 வகையான பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் மீதியாக காணப்பட்டது.

(iv) 2014 நவம்பர் 21 ஆந் திகதி சபை தீர்மானத்தின் பிரகாரம் சபை மண்டபத்திற்காக ரூபா 415,270 இற்கான மதிப்பீடு ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் அங்கீகரித்த தொகையை மிகைத்து ரூபா 540,915 தொகை ஒன்று செலவிடப்பட்டுள்ளது.

3.4 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| மூன்றாம் தரம் | 01 | 01 | - | - |
| இரண்டாம் தரம் | 30 | 27 | 03 | - |
| ஆரம்ப தரம் | 58 | 51 | 07 | - |
| ஏனைய(அமைய, தற்காலிக,ஒப்பந்த) | - | 02 | - | 02 |
| மொத்தம் | 89 | 81 | 10 | 02 |

மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பதவியணி சம்பளங்கள் மற்றும் மந்திரிமார் படி ஆக ரூபா 19,494,800 தொகை ஒன்று மீளளிப்பு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான சம்பளங்கள் மற்றும் மந்திரிமார் படி என ரூபா 24,861,954 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தமையால் சபை நிதியத்தில் இருந்து ரூபா 5,367,154 தொகை ஒன்று செலவிடப்பட்டுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

(அ) 2014 ஆண்டிற்கான சபை சமர்ப்பித்திருந்த பாதீடு 2013 திசெம்பர் 13 திகதிய பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்காத போதிலும் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் 2014 ஜனவரி 02 ஆந் திகதிய இலக்கம் 1843/35 கொண்ட வர்த்தமானியின் மூலம் மற்றும் 2014 ஜனவரி 06 ஆந் திகதிய மாத்தறை உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கடிதத்தின் மூலம் பாதீடு அனுமதிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பாதீட்டுடன் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வரைபடங்கள், அமைப்பு வரைபடம், வருமானம் மற்றும் செலவுகள் பற்றிய இணக்கங் செய்யும் வரைபடங்கள், சபைக்கு

சொந்தமான சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய தகவல்கள் அடங்கியிருக்கவில்லை. பாதீட்டை தயாரிப்பதற்கு முன்னர் மந்திரிமார்களை அறிவுறுத்தல், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் தன்னார்வு அமைப்பு, நலன்புரி சங்கங்கள், அரசசார்பற்ற அமைப்புக்களின் கருத்துக்கள் மற்றும் பிரேரணைகள் பெற்றுக்கொள்ளல் நடைபெற்றிருக்கவில்லை.

(இ) பாதீட்டில் மூலதன செலவுகளின் பொழிப்பில் பன்முகப்படுத்தப்பட்ட, மாகாண குறிப்பிட்ட, மாகாண சபையின் நெறிமுறை அடிப்படை, கமநெகும, மகநெகும மற்றும் சபை நிதியத்தின் மூலம் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த நிர்மாண வேலைகளின் பட்டோலை ஒன்று காணப்படவில்லை. அத்துடன் பாதீட்டில் குறிப்பிடப்படாத 33 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 14,766,650 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீட்டில் வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தறு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 மாதாந்த சபைக் கூட்ட அறிக்கைகள்

---------------------------------------------------------------

1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய இலக்கம் 554/5 கொண்ட வர்த்தமானியின் மூலம் அமைக்கப்பட்ட பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 177 இன் பிரகாரம் சபையின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி ரூபா 5,000 தொகையை மிகைத்த கொடுப்பனவுகளை அங்கீகரிக்க முடியாது என இருந்த போதிலும் அவ்வறையறையினை மிகைத்து பணம் செலுத்தும் அதிகாரம் 2014-04-22 திகதிய சபை தீர்மானம் ஒன்றின் மூலம் தலைவருக்கு சாட்டப்பட்டிருந்தது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) வருமான நிருவாகம்

(ஈ) களஞ்சிய நிருவாகம்

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு